# Politics in Thirukkural

**Dr. M. Janagar**
*Assistant Professor, Department of Tamil*
*Sudharsan Engineering College, Pudukkottai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255994

**Abstract**

*Every couplet in Thirukkural that deals with politics is like a seed. These couplets reflect Thiruvalluvar's vision of politics and the expectations he held in his mind regarding governance. Such couplets should not only be praised verbally; politicians and others associated with them must actively follow and implement the principles praised in the text. Doing so ensures the welfare of the nation and the betterment of governance.*

**References**

1. Thirukkural – Couplet No. 381
2. Ibid., Couplet No. 383
3. Ibid., Couplet No. 384
4. Ibid., Couplet No. 385
5. Thaa. Pandiyan – Thiruvalluvar's Politics and Economics, pp. 64–71
6. Thirukkural – Couplet No. 386
7. Silappathikaram – 13:5 & 10
8. Thirukkural – Couplet No. 388
9. N. Subramanian – Sangam Era Sociology, pp. 489–490
10. Thirukkural – Couplet No. 541
11. Purananuru – 186
12. Seevaka Sindamani – Verse 2908
13. Thirukkural – Couplet No. 551
14. Ibid., Couplet No. 552
15. Ibid., Couplet No. 553
16. Silappathikaram – 11:60
17. Kalithogai – 10
18. Thirukkural – Couplet No. 742
19. Ibid., Couplet No. 743
20. Perumpanarruppadai – Lines 80 & 82

# திருக்குறளில் அரசியல்

***முனைவர் மா. ஜனகர்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சுதர்சன் பொறியியல் கல்லூரி, புதுக்கோட்டை

***ஆய்வுச் சுருக்கம்***
*திருக்குறள், அரசியல் குறித்துக் கூறிய ஒவ்வொரு குறள் கருத்தும் ஒவ்வொரு விதை போன்றதாகும். அக்குறள்கள் திருவள்ளுவரின் நெஞ்சுரத்தைப் பெற்று அந்நெஞ்சின் அரசியல் எதிர்பார்ப்பு புலப்படுகின்றன. இத்தகையக் குறள்களைப் புகழ்வதோடு மட்டும் நில்லாது அரசியலாளரும் அவர் சார்ந்த பிறரும் அவர் வழி நின்று புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் அதுவே, நாட்டிற்கும் நாட்டரசியனுக்கும் நலம் நல்கும் வழியாகும்.*

## முன்னுரை

மனிதன் இயல்பாகவே சேர்ந்து வாழும் இயல்புகளைக் கொண்டவன் ஆவான். தனித்து வாழவிரும்பாத அவனை அவனுடையத் தேவைகள் பிறரோடு சேர்ந்து வாழும் சூழல்களுக்கு உள்ளாக்குகின்றன. காரணம், அவன் தன் வாழ்க்கைத் தேவைகளைப் பிறரைச் சார்ந்தே நிறைவேற்றிக் கொள்ள இயலும். இப்படிப் பிறரைச் சார்ந்து வாழும் போது பிரச்சனைகள் உருவாவது தவிர்க்க இயலாதது. அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சட்ட வரையறைகள் தேவைப்பட்டன. இச்சட்ட வரையறைகளை வடிவமைக்கவும் வழக்கப்படுத்தவும் ஓர் அமைப்புத் தேவைப்பட்டது. எல்லாரும் ஏற்கும் இப்பொது அமைப்பு பல்வேறு அங்கங்களைப் பெற்றஅரசாங்கம்எனப்பட்டது.அத்தகைய அரசாங்கத்தின் பல்வேறு கட்டமைப்புகளைக் கொண்ட ஒரு சமுதாயமே அரசு எனப்பட்டது.

இரு கண்களைப் போன்ற சமுதாயமும் அரசும் இல்லாமல் மனிதனால் பண்பாகவோ பாதுகாப்பாகவோ வாழ இயலாது வளரவும் முடியாது. அனைத்து உயிர்களுக்கும் அரணாக அமைந்த அரசியல், தமிழில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் பொருளின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. பழந்தமிழ்ச் சமுதாயத்தில் அடித்தளமாக விளங்கிய அரசியல் எத்தகைய உறுப்பியல்களைக் கொண்டு இயங்கியது என்பதையும் அவை உணர்த்தும் குறிப்புப் பொருள்களையும் விளக்குகின்றது.

## அரசர் குறித்த சொற்கள்

அரசர் என்ற சொல் அரசர், அரசவை, அரசு, அரசியல் எனப் பல சொற்களாலும் வழங்கப்படுகின்றன. அரசர் எனும் சொல்லிற்கு மாற்றாக இறை, இறைவன், மன்னர், மன்னவர், மன்னவன், வேந்து, வேந்தன், வேந்தர் ஆகிய சொற்களும் அரசு எனும் சொல்லிற்கு மாற்றாக கொற்றம் எனும் சொல்லும் தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் இடம் பெறுகின்றன.

தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் “இறை” என்ற சொல்லை, “அரசர்” என்னும் பொருளில் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில், “இறைவன்” என்ற சொல்,“தலைவன்சுஎனும் பொருளில் இடம்பெறுகிறது. மணிமேகலை அச்சொல்லை, “கடவுள்”, “தலைவன்” என்ற

பொருளில் பயன்படுத்துகின்றது. வெற்றியைக் குறிக்கும், "கொற்றம்" எனும் சொல், "கொற்றவன்" எனக் குறிப்பிடும்போது "அரசன்" "அரசு" எனவும் வழங்குகின்றது.

மன்னன், மன்னவன், மன்னர், மன்னவர் எனும் சொற்கள் அரசனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. "மன்" என்பதற்கு நிலையான என்பது பொருளாகும். வேந்து, வேந்தன், வேந்தர் எனும் சொற்களும் அரசனுக்குரிய மாற்றுச் சொற்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அமைச்சர், அமைச்சன் எனும் சொற்கள் அமைச்சு எனக் குறுகி வழங்குவது போல வேந்தர், வேந்தன் எனனும் சொற்கள் வேந்து எனக் குறுகியது. வேந்தர் என்பதற்குச் சூடுதல் பொருளும் உண்டு. தலையில் பூவையோ கிரீடத்தையோ (மணிமுடி) வேய்ந்தவர் (சூடியவர்) வேந்தர் எனப்பட்டார். இவ்வாறு அரசனுக்குரிய மாற்றுச் சொற்களாகப் பல சொற்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் வழங்கப்படுவதன் மூலம் அரசு என்ற அமைப்பு கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டில் உருவாகியுள்ளது என்பதைத் தெளிவாக அறிய முடிகின்றது.

## திருக்குறள்

திருக்குறள், அரசியலை இருபத்தைந்து அதிகாரங்களிலும் (அதி.39-63) அதன் உறுப்பியல்களான அமைச்சு (64-73) நாடு (74), அரண் (75), பொருள் (76), படை (77-78), நட்பு (79-95), குடிமை (96-108) என்னும் ஏழுவகைகளை நாற்பத்தைந்து அதிகாரங்களிலும் கூறுகின்றது. அரசியலும் அதன் ஏழு உறுப்பியல்களும் அரசாட்சி என அழைக்கப்படும்.

## இறைமாட்சி - விளக்கம்

இது அரசியலமைப்பாகும் முதலதிகாரமாகும். இச்சொல்லில், இறை என்பது இறைவன் என்னும் பொருள் தந்து அரசனைக் குறித்து அவனுக்கு இருக்க வேண்டிய நற்குணங்களையும், நற்செய்கைகளையும் விவரிக்கின்றது. இதனால் அரசியலை நடத்துவதில் முதன்மை பெற்ற அரசன் அக்காலத்தில் இறைவனாகக் கருதப்பட்டது வெளிப்படும்.

அரசியலைப் பாடும் திருக்குறளின் கடைசி அதிகாரம், "கயமை" ஆகும். இறை மாட்சியில் தொடங்கிய அரசியல், கயமையில் முடிவதைக் காணுகையில் திருக்குறள், தம் கால அரசியலாரின், அரசியல் வாழ்வின் தொடக்கத்தையும் அது எந்த நிலையில் முடியும் என்பதையும் மறைமுகமாகக் காட்டுவதை அறியலாம்.

## இறைமாட்சி அல்லது அரசன் மாட்சி

படை, குடி (மக்கள்), கூழ் (உணவு), அமைச்சு. நட்பு, அரண் என்ற ஆறு உறுப்புகளையும் கொண்ட அரசன், ஆண் சிங்கம் போன்றவனாவான் என்பதை,

**படைகுடிகூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு1**

என்னும் குறளின் வழி எடுத்துரைக்கிறார். இதன் வாயிலாக நாடு இல்லாமல் குடி இல்லை என்பதால் இங்கு குடி என்பது நாட்டையும் உள்ளடக்கியது ஆகும். அவற்றுள் ஒன்று குறையினும் அக்கால அரசியல் நிலைப்பது அரிது அவ்வாறினையும் பெற்ற அரசனைப் பகையரசன் வெல்ல இயலாது என்பதை அறிய முடிகின்றது.

அரசகாரியங்களை விரைந்து செய்யும் திறன், அவற்றை அறிய உதவும் கல்வி, செய்து முடிக்கும் மனவுறுதி என்ற மூன்றும் அரச னிடம் அமைய வேண்டிய குணங்களாகும். 2 அரச அறத்தின் இயல்பை,

**அறனிழுக்காது அல்லவை நீக்கிமறன இழுக்கா**
**மானம் உடையது அரசு[3]**

என்னும் குறள் கூறுகின்றது.

ஓர் அரசு செய்ய வேண்டிய நான்கு முக்கியக் கடமைகளை வகைப்படுத்தும் திருக்குறள்,

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு[4]**

என்கிறது. இக்குறளை தா. பாண்டியன், நான்கே சொற்களுக்குள் நான்கு தூண்களை எழுப்பி நான்கு பக்கச் சுவர்களையும் கட்டி எழுப்பி, ஒரு மக்கள் அரசை நிறுத்திக் காட்டிவிடுகிறார். ஓர் அரசு இயற்ற வேண்டும் என்றால் மனிதர்களின் உழைப்புச் சக்தியை முழுமையாகப் பயன்படுத்திட வேண்டும் என்பதாகும். இயற்றியது என்பது பயன்படு பொருட்கள் தான், அவற்றை ஈட்டி சேர்த்துப் பாதுகாக்க வேண்டும் என்ற இரண்டாவது கடமை வற்புறுத்தப்பட்டது. காத்தல் என்பது மக்களை மட்டும் அல்ல, உயிரினம் வாழ உதவிடும் இயற்கை வளம்காக்கப்பட வேண்டும்.[5] என புதிய நோக்கில் விளக்குவது இங்கு குறிப்பிடவேண்டியதாகும். காத்த வகுத்தலும் வல்லது அரசு எனும் போது மக்களுக்கு எவ்வாறு செலவிட வேண்டு மென்றால்? அறம், பொருள், இன்பம் எனும் வழிகளில் செலவிட வேண்டும் எனலாம்.

எளிதில் காணக் கூடியவனாகவும் இனிய சொல்லை உடையவனாகவும் விளங்கும் அரசின் நாட்டை உலகம் உயர்த்திக் கூறும்.[6] இக்கருத்திற்கு அரணாக உலகம் செங்கோல் அரசின் நாட்டை உயர்த்திக் கூறுவதை, சிலப்பதிகாரம், புறஞ்சேரி இறுத்த காதை,

**கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா**
**வாள்வரிவேங்கையும் மான்கணம்மறலா**
**அரவும்சூரும் இரைதேர் முதலையும்**
**உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா**
**செங்கோல் தென்னவர் காக்கும்நாடு**

என

**எங்கனும் போகிய இசையோ பெரிதே**[7]

என்று கோவலன் கூற்றாக இளங்கோவடிகள் பாண்டியன் நாட்டைச் சிறப்பித்துக் கூறுவதைச் சுட்டலாம்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப்படும்**[8]

எனும் குறள் பொற்கைப் பாண்டியன் போலத் தன்னையும், மனுநீதிச் சோழன் போலத் தன் மகனையும் தண்டித்தலை நினைவு கூரச் செய்கின்றது. இறை இறைவன் என்று தெய்வத்தைச் சுட்டும் பெயர்கள் அரசனைச் சுட்டுவதும் கோயில் எனும் சொல் தெய்வம் எழுந்தருளிய இடத்திற்கும் அரசனது அரண்மனைக்கும் பொருந்துவதை இக்குறளால் நிறுவலாம்.

## செங்கோண்மை

அரசனின் நேர்மையான ஆட்சி நேரான கோல் போல் இருப்பதால் செங்கோல் எனப்படும். கோன் என்பது அரசனைக் குறிக்கும். குடிகள் செய்த குற்றங்களை ஆராய்ந்து நடுவுநிலைமையுடன் அதற்கேற்ற தண்டனைகளை நிறைவேற்றுவதே செங்கோலாட்சியின் முறையாகும்.[9] அரச நெறியில் இருந்து விலகாத ஆட்சி செங் கோண்மை எனப்படும். உலக உயிர்கள் மழையை எதிர்பார்த்து வாழ்வது போல நாட்டு மக்கள் அரசனது செங்கோல் ஆட்சியால் வாழ்வர்.[10] மழை உயிர்களுக்கு இன்பம் தருவது போல அரசன் மக்களுக்கு இன்பம் தருகிறான். இங்கு புறநானூறு,

**நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால்யான் உயிர் என்பது அறிகை**
**வேல்மிகுதானை வேந்தற்குக் கடனே**[11]

என்று கூறுவதும் இங்கு கவனிக்கத்தக்கனவாகும்.

அந்தணர் இயற்றிய நூலுக்கும் அறவொழுக்கத்திற்கும் அடிப்படை, அரசனின் செங்கோலே ஆகும்;[12] "அந்தணர் என்போர் அறவோர் (குறள்30) என்பதால் அவர் பிராமணபுரியிலிருந்து வேறானவர் என்பது தெளிவாகும்.

## கொடுங்கோன்மை

அரசனால் ஆளப்படும் நேர்மை இல்லாத ஆட்சி வளைந்த கோல்போல் இருப்பதால் கொடுங்கோல் எனப்பட்டது.

கொடுங்கோலின் செயல்பாடு கொடுங் கோன்மை எனப்படும்.

பொருளாசையால் குடிகளை வருத்தமடையச் செய்யும் அரசன் கொலைத் தொழில் செய்பரை விடக் கொடியவன் ஆவான் என்பதை,

**கொலை மேல்கொண்டாரின் கொடிதே**
**அலை மேற்கொண்டு**
**அல்லவை செய்து ஒழுகும் வேந்து**[13]

என்ற குறள் வெளிப்படுத்துகின்றது. சில நொடிகளில் செய்யும் கொலைத் துன்பத்தைவிட நாள்தோறும் குடிகளை வருத்தும் அரசன் மிகக்கொடியவன் ஆவான். கொடுங்கோலன் குடிகளிடம் பொருள் கேட்டால் வழிப்பறிக்கள் வன்வழிப் போக்கரிடம் பொருளைப் பறிப்பது போலாகும்.[14]

நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து நீதி வழங்காதவன் நாள் தோறும் நாட்டை இழப்பான்.[15] அரசன் முறை தவறி நடப்பதால் நாள்தோறும் நாட்டை இழத்தலைச் சிலப்பதிகாரம், காடுகாண்காதை,

**கோத் தொழிலாளரொடு கொற்றவன் கோடி**
**வேத்தியல் இழந்தவியனிலம். . .**
**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்து**[16]

என்கிறது. இதனால், நாடு வளங்குன்றுவதையும் குடிமக்களின் அரசப் பற்றுக் குறைவதையும் பகைவரால் நாடு மெல்ல மெல்ல கைப்பற்றப்படும் என்பதையும் அறியலாம். அமைச்சராலும் அரசராலும் நீதி தவறிச் சென்ற நாட்டை கலித்தொகை,

**வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின்**
**அலவுற்றுக்குடி கூவ ஆறின்றிப் பொருள்**
**வெஃகிக் கொலையஞ்சா விளைவராற்**
**கோல்கோடியவனிழல்**
**உலகு போல்**[17]

என்று பாடுகின்றது.

### தூது

இரு அரசர்க்கும் இடையிலுள்ள பகையைத் தன் திறத்தால் உறவாக, நட்பாக மாற்றும் பணிதூது என்றும், அதைச் செய்பவர் தூதர் என்றும் அழைக்கப்படுகிறார். நெடிலும் (தூ) குறிலுமாகிய (து) ஓரின, "த" தகர வரிசை எழுத்துகள் நீண்ட இடைவெளியான பகையை நெருக்கிச் செல்லும் தன்மை உடையதாய் அமைந்துள்ளது. நல்லெண்ணச் சூழலுடன் நெடிலும் குறிலும் இணையும் இச்சொல் உறவினையும் நட்பினையும் உருவாக்கும் சொல்லுமாகும். இது போல் பொருள் படைத்த சொற்கள் தமிழில் உள்ளனவா? என்பது ஆய்விற்குரியது.

### அரண்

அகழி நீரும் அதனை, அடுத்த வெற்று நிலமும், அதனை அடுத்த வெற்று நிலமும், அதனை அடுத்த காடும், அதனை அடுத்த மலையும் தனக்கு முன்னாக உடையது சிறந்த மதில் அரணாகும்.[18] மதில் அரண், நீர், அரண், காட்டரண், மலை அரண் என அரண்நான்காயினும் இங்கு அரண் என்பது மதில் அரணையே சுட்டும். சிறந்த மதிலரண் எது? என்பதைத்; திருக்குறள்,

**உயர்வு அகலம்திண்மை அருமை இந்நான்கின்**
**அமைவு அரண்என்று உரைக்கும்நூல்**[19]

என்பதில் உயர்வு என்பது சுவரின் அடிப்பகுதியில் அமைந்த அகலப் பகுதியாகும். திண்மை என்பது செதும்பை உருக்கிச் சாந்தாக வார்த்துக் கருங்கற்களால் கட்டப்பட்ட மதிலாகும். அருமை என்பது பலவித பொறிகளுடன் (கருவிகள்) அமைந்துப் பகைவரால் அணுக முடியாத மதிலாகும்.

### அரசுப் பொருளியல்

நிலவழி வணிகத்தில் வாகனங்களிலும் நீர்வழி வணிகத்தில் மரக் கலங்களிலும் வரும் பொருள்களுக்குப் பெறப்படும் வரிவருவாயைத் திருக்குறள், உல்கு பொருள்[19] என்கிறது. இக்குறளால், உள்நாட்டு உற்பத்திப் பொருள்களுக்கும் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதியாகும் பொருள்களுக்கும் (Export

and Import) சுங்கவரி வசூலிக்கப்பட்டது எனத் தெரிகிறது. உள்நாட்டு உற்பத்திப் பொருள்களைப் பிற நாட்டிற்கு எடுத்துச் செல்லும் போது சுங்கச்சாவடிகள் அமைத்து அலுவலர்களை நியமித்துச் சுங்க வரிவசூலித்தனர் என்பதை, பெரும்பாணாற்றுப்படை,

**அணர்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்**
**உல்குடைப் பெருவழி கவலைகாக்கும்**
**வில்லுடைவைப் பின்வியன் காட்டுஇயவு**[20]

என்றும் பாடித் தெரிவிக்கின்றது.

**முடிவுரை**

திருக்குறள், அரசியல் குறித்துக் கூறிய ஒவ்வொரு குறள் கருத்தும் ஒவ்வொரு விதை போன்றதாகும். அக்குறள்கள் திருவள்ளுவரின் நெஞ்சுரத்தைப் பெற்று அந்நெஞ்சின் அரசியல் எதிர்பார்ப்பைப் புலப்படுகின்றன. இத்தகையக் குறள்களைப் புகழ்வதோடு மட்டும் நில்லாது அரசியலாளரும் அவர் சார்ந்த பிறரும் அவர் வழி நின்று புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் (538) அதுவே, நாட்டிற்கும் நாட்டரசியலுக்கும் நலம் நல்கும் வழியாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. திருக்குறள், எண்-381.
2. மேலது, எண்.383.
3. மேலது, எண்.384.
4. திருக்குறள், எண்.385.
5. தா. பாண்டியன், திருவள்ளுவரின் அரசியல் பொருளாதாரம், பக்.64,71.
6. திருக்குறள், எண்.386.
7. சிலப்பதிகாரம், 13:5-10.
8. திருக்குறள்எண்.388.
9. ந.சுப்பிரமணியன், சங்ககால வாழ்வியல், பக்:489, 490.
10. திருக்குறள்எண்.541.
11. புறநானூறு, 186
12. சீவகசிந்தாமணி, பா.2908.
13. திருக்குறள், எண்.551.
14. மேலது, எண்.552.
15. மேலது, எண்.553.
16. சிலப்பதிகாரம்; 11:60.
17. கலித்தொகை, 10
18. திருக்குறள், எண்.742.
19. மேலது, எண்.743.
20. பெரும்பாணாற்றுப்படை, வரி; 80-82